**சாட்சிய வாக்குமூலம்**

**மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.**

சிறப்பு அமர்வு வழக்கு எண் 220/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 11 (lw–18 ) | நாள் | 16.04.2025 |
| பெயர் | பாலாஜி | தொழில் | |
| தந்தை பெயர் | தர்மராஜ் | வயது | 35 |
| கிராமம் | திருவிழந்தூர் | தாலுக்கா | மயிலாடுதுறை |

(1 முதல் 10 எதிரிகள் சிறையிலிருந்து ஆஜர் படுத்தப்பட்டனர். 11ம் எதிரி Split up in Spl.SC No. 26/2025. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் திருவிழந்தூர் தோப்பு தெருவில் குடியிருந்து வருகிறேன். பால்வியாபாரம் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன அஜித்குமாரை தெரியாது. இறந்த பிறகு அவர் இறந்து விட்டதாக தெரிந்து கொண்டேன். கொலை செய்யப்பட்டு இறந்து விட்டதாக தெரிந்து கொண்டேன். அஜித் கொலை செய்யப்பட்ட தெருவிற்கு அடுத்த தெருவில் வசித்து வருகிறேன். தினமும் நான் பால் வியாபரம் செய்ய நான் அதிகாலையில் தெருவிற்கு செல்வது வழக்கம். அதுபோல் சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு மயிலாடுதுறை திருவிழந்தூர் தெற்கு வீதியில் வரும்போது மயிலாடுதுறை DSP மற்றும் 4, 5 போலிசார் அங்கு இருந்தார்கள். என்னுடன் மணிகண்டனும் உடனிருந்தார். சம்பவம் நடந்த இடத்தை DSP மற்றும் போலிசார் எங்கள் முன்பாக பார்வையிட்டு வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகசரில் நானும் மணிகண்டனும் சாட்சி கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் சாட்சிகையெழுத்து என்னுடையது இரண்டாவது சாட்சி கையெழுத்து மணிகண்டனுடையது. **அந்த பார்வை மகசர் அசாஆ 2** ஆகும். எங்கள் முன்பாக ரத்தகறை படிந்த தார்சாலை கப்பி கொஞ்சம் 2. இரத்தக்கறை படியாத தார்சாலை கப்பி கொஞ்சம், 3. இரத்தகறை படிந்த வாடாமல்லிக்கலர் பார்டர் போட்ட வாடாமல்லி கலர் வேட்டி

ஒன்று, Hero Splender plus மோட்டார் சைக்கிள் TN 51 AP 7560 என்ற பதிவெண் கொண்ட வண்டி ஆகியவற்றை எங்கள் முன்பாக கைப்பற்றுதல் மகசரில் போலிசார் கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது இரண்டாவது சாட்சி கையெழுத்து மணிகண்டனுடையது. **அந்த கைப்பற்றுதல் மகசர் அசாஆ 3** ஆகும். தார்சாலை கப்பி கொஞ்சம் **சாபொ –1** இரத்தக்கறை படியாத தார்சாலை கப்பி கொஞ்சம், **சாபொ –2** இரத்தகறை படிந்த வாடா மல்லிக்கலர் பார்டர் போட்ட வாடாமல்லிக்கலர் வேட்டி ஒன்று, **சாபொ – 3** Hero Splender plus மோட்டார் சைக்கிள் TN 51 AP 7560 என்ற பதிவெண் கொண்ட வண்டி **சாபொ – 4.** போலிசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 4 எதிரிகள் மற்றும் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 4 எதிரிகள் மற்றும் 10 எதிரிகள் தரப்பில் திரு. K. சந்தோஷ், MS No. 3468/2019 என்ற வழக்கறிஞர் இன்று வக்காலத்து தாக்கல் செய்து 231(2) குவிமுச பிரிவின் கீழ் Defer மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கு உயர் நீதிமன்றத்தால் இரண்டு மாத காலத்திற்குள் முடிக்க வேண்டுமென்று Direction கொடுக்கப்பட்ட வழக்கு ஏற்கனவே விசாரித்த சாட்சிகளை மேற்படி எதிரிகள் தரப்பில் வழக்கை கால தாமதப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில்குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. இன்றும் குறுக்கு விசாரணைக்கு தயாராக இல்லை. எனவே இந்த மனு இருதரப்பு வாதங்களுக்கு பிறகு தள்ளுபடி செய்யப்படுகிறது. 1 முதல் 4 எதிரிகள் மற்றும் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று பதிவு செய்யப்படுகிறது.

**5 முதல் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து போட்ட பேப்பர் எத்தனை பக்கம் கொண்டது அதில் என்ன எழுதியிருந்தார்கள் என்று தெரியுமா என்றால் வரைபடம் வரைந்தார்கள். இரண்டு பக்கத்தில் எழுதியிருந்தார்கள். என்ன பொருட்களை கைப்பற்றினார்கள் என்றும் எழுதியிருந்தார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக

T.R.M.

என்னை யாரும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக காவல் நிலையத்திற்கு எத்தனை முறை சென்றேன் என்றால் ஒரு முறை கூட போகவில்லை. நான் காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.

**9ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எங்கள் தெருவிற்கும் நான் கையெழுத்து போட்டதாக சொல்லும் தெருவிற்கும் ஒரு கிமீ தொலைவு இருக்குமா என்றால் இருக்காது அரைக்கிலோமீட்டர் தூரம் தான் இருக்கும். அந்த இடத்தில் வீடுகள், கடைகள் உள்ளது என்றால் வீடுகள் உள்ளது. பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் போலிசார் எழுதியவை என்றாலும் அதனால் என்மூலமாக அவற்றை குறியீடு செய்வதற்கு 9ம் எதிரி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்படுகிறது என்றால் சரியல்ல. பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் ஆகியவற்றை எழுதிய காவலர் நிலை (Designation) எனக்கு தெரியாது என்றால் சரி. நான் கையெழுத்து போட்ட பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் என்ன எழுதியிருந்தார்கள் என்று தற்போது நினைவில்லை என்றால் வரைபடம் வரைந்திருந்தார்கள். இரண்டு பக்கத்தில் எழுதியிருந்தார்கள். என்ன பொருட்களை கைப்பற்றினார்கள் என்றும் எழுதியிருந்தார்கள். மேற்படி வரைபடம் வரைய எழுத பத்து நிமிடம் ஆகியிருக்குமா என்றால் ஒரு மணி நேரம் ஆகியிருக்கும். அந்த சமயத்தில் அந்த தெருவில் வசிக்கும் மக்கள் அங்கிருந்தார்களா என்று எனக்கு நினைவில்லை என்றால் போலிசார் மட்டும் தான் இருந்தார்கள். நான் அந்த இடத்திற்கு போகவில்லை என்றாலும் அதனால் தான் அங்கு மக்கள் இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. மோட்டார் சைக்கிள் மற்றும் நாலு முழம் வேட்டி

T.B.

ஆகியவை அங்கு இல்லை என்றாலும், அங்கிருந்து கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. அங்கிருந்துதான் கைப்பற்றினார்கள். மேற்படி மோட்டார்சைக்கிள் வேளாங்கண்ணி காவல் நிலையத்தின் வேறு ஒரு குற்றவழக்கில் சம்பந்தப்பட்ட வாகனம் என்றாலும், அந்த வாகனம் வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் கைப்பற்றப்பட்ட வாகனம் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. (மேற்படி கேள்வி கேட்க அரசு தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. ஆட்சேபணை பதிவு செய்யப்படுகிறது) வரைபடத்தில் மோட்டார்சைக்கிள் மற்றும் வேட்டி காட்டப்பட்டிருந்ததா என்றால் காட்டப்பட்டிருந்தது. வரைபடத்தில் அதுபோல் குறிப்பிடப்படவில்லை என்றாலும், எனக்கு தெரியாது என்பதால் அதுபோல் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மோட்டார்சைக்கிள், மற்றும் வேட்டியை தவிர வேறு எதுவும் அந்த இடத்தில் இல்லை சரிதானே என்றால் சரிதான். பார்வை மகசர் மற்றும் வரைபடம் அந்த இடத்தில் தயார் செய்யப்படவில்லை என்றாலும், நானும் அந்த இடத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. மோட்டார் சைக்கிள் வேட்டி அந்த இடத்தில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் மயிலாடுதுறை காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அங்கு வைத்து தான் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. மோட்டார் சைக்கிளும் வேட்டியும், காவல் நிலையத்தில் வைத்து இவ்வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. போலிசார் சொல்லிக்கொடுத்து மனப்பாடம் செய்து முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை ஒப்பித்தேன் என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

16/6/25
மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை
14/4/25